DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - பாஸ்கர் | **PW-34** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - |

(எதிரிகள் ஆஜர் இல்லை )

<u>முதல் விசாரணை:</u>-

நான் அறியலூர் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் உதவி பேராசிரியராக பணியாற்றி வந்தேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் பெரம்பலூரில் உள்ள தனலட்சுமி ஸ்ரீனிவாசன் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றி வந்தேன். தினேஷ், பிரித்துவிராஜ் மற்றும் நான் ஆகியோர்கள் சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் ME படித்தோம். மூவரும் பெரம்பலூரில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியிருந்தோம். அப்போது தினேஷின் இளங்கலை கல்லூரி தோழர் பிரபாகாரன் என்பவர் அவரை பார்க்கவருவார். அந்த வகையில் பிரபாகாரனை எனக்கு தெரியும். பின்னிட்டு TNPSC Group-II தேர்வு வினாத்தாள் முன்கூட்டி வெளியான விவகாரம் தொடர்பான வழக்கில் அவர் கைது செய்திருப்பதாக செய்திகளை பார்த்து தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் lenovo laptop என்னுடையது தான். அதை பிரித்திவிராஜ் என்பவரிடம் இருந்து கம்பைநல்லூர் போலிசார் வாங்கி சென்றிருக்கிரார்கள், அது சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரபாகாரன் பெரம்பலூரை சார்ந்தவர். ஆனால், அவர் வீடு எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் அதை யாருக்கும் அடையாளம் காட்டவில்லை.

**<u>சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

போலிசார் விசாரணையின் போது மேற்படி பிரபாகாரன் கடந்த 11.08.2012 ம் தேதி மற்றொரு நபருடன் என்னுடைய அறைக்கு வந்து என்னுடைய laptop யை கேட்டதாக எனக்கு பிரித்திவிராஜ் தகவல் சென்னாதாகவும் நான் அதை கொடுக்க சொன்னதாகவும், அதை மீண்டும் எனக்கு திருப்பி கொடுக்கவில்லை என்றும் அவர் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டதை தெரிந்து கொண்டு அவரது செல்போனை தொடர்பு கொள்ள முயற்சி செய்தபோது அது அனைக்கப்பட்டிருந்ததாகவும், செல்போன் அழைப்புகளை வைத்து போலிசார் என்னை அழைத்துக்கொண்டு 03.09.2012 ம் தேதி பிரபாகாரன் வீட்டிற்கு சென்று அங்கு அவரை கைது செய்ததாகவும், அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும் குறிப்பிட்டுவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டும் என்று நடந்த சம்பவத்தை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 25, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சா.பொ.1 laptop என்றுடையதுதான் என்பதை தெரிந்து கொள்ள போலிசார் என்னிடம் பில் எதையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**